# <u>பாலினம் மற்றும் சமத்துவம்</u>

**தலைப்பு: கஸ்தூரிபாய் காந்தி உண்டு உறைவிடப் பள்ளி (கேஜிபிவி)**

**(Kasturba Gandhi Balika Vidyalaya-KGBV)**

**நோக்கங்கள்:**

பெண்களுக்கான கல்வி அணுகல் மற்றும் சமத்துவத்திற்கான வாய்ப்பினை அதிகரிக்க, மத்திய கல்வி அமைச்சகம் 61 கஸ்தூரிபாய் காந்தி உண்டு உறைவிடப் பள்ளிகள்(கேஜிபிவி - வகை I, II & III) மற்றும் 44 பெண்கள் விடுதிகள் (கேஜிபிவி - வகை IV) ஆகியவற்றை அனுமதித்துள்ளது, இத்தகு உண்டு உறைவிடப்பள்ளிகள் மற்றும் விடுதிகளில் பெண் குழந்தைகள் பள்ளியிலிருந்து இடைநிற்றலின்றி கல்வியினை தொடர வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

பெண்களின் பொருளாதார தன்னிறைவு கல்வியின் வழி மட்டுமே அடைய முடியும். எனவே, 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், கிராமப்புற பெண்களின் கல்வியறிவு விகிதம் தேசிய சராசரியான 46.13%ஐ விட குறைவாகவும் மற்றும் தேசிய சராசரியான 21.59%ஐ விட பாலின இடைவெளி அதிகமாக உள்ள கல்வியில் பின் தங்கிய ஒன்றியங்களில் இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் கஸ்தூரிபாய் காந்தி உண்டு உறைவிடப் பள்ளிகள் திட்டமானது 2004-2005ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. பெண்கள் விடுதி திட்டமானது 2008-2009ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டு, 2009-2010 ஆம் ஆண்டில் 44 கல்வியில் பின் தங்கிய ஒன்றியங்களிலும், தலா 100 பெண்கள் தங்கி பயன்பெறும் வகையிலான பெண்கள் விடுதிகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன.

கஸ்தூரிபாய் காந்தி உண்டு உறைவிடப் பள்ளிகள் திட்டத்தின் முதன்மை நோக்கம், பெண் குழந்தைகள் தங்கிப் பயின்று பயன்பெறும் வகையிலான விடுதிகளை நிறுவதலின் வழி தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வியில், பின்தங்கிய சமூக பிரிவுகளை சார்ந்த பெண் குழந்தைகளுக்கு கல்வியில் சம வாய்ப்பு வழங்குதல் மற்றும் பெண் கல்வியின் தரத்தினை மேம்படுத்துதலாகும். கஸ்தூரிபாய் காந்தி உண்டு உறைவிடப் பள்ளிகள் திட்டத்தின் முதன்மை அடைவு இலக்குகள் பின்வருமாறு;

- SC, ST ஆகிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த பெண் குழந்தைகளுக்கு சமமான கல்வி வாய்ப்புகளை உருவாக்கும் வகையிலான வசதிகளை உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல்.
- கல்வியில் பெண்குழந்தைகளின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தல்**.**
- கஸ்தூரிபாய் காந்தி உண்டு உறைவிடப் பள்ளிகளில் தங்கி பயிலும் அனைத்து பெண் குழந்தைகளுக்கும் தரமான கல்வி வழங்குதலை உறுதி செய்தல்.
- இடைநிற்றலின்றி அனைத்து பெண் குழந்தைகளையும் தக்க வைத்தல்.
- பெண்களின் கல்வியின் தரத்தை மேம்படுத்தி அவர்களின் திறன் மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்கும் மற்றும் இன்றைய போட்டி மிகுந்த சமூதாயத்தில் பெண் குழந்தைகள் தடம் பதித்து முன்னேற செய்தல்

- கஸ்தூரிபாய் காந்தி உண்டு உறைவிடப் பள்ளிகளில் பாதுகாப்பான சூழலை உறுதி செய்தல்.

**செயல்படுத்தும் முறைகள்**

ஒவ்வொரு ஆண்டும் கல்வியாண்டு தொடங்கும் முன், கேஜிபிவிகளின் சீரான செயல்பாட்டிற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மாநிலத் திட்ட இயக்கத்தில் உருவாக்கப்பட்டு அனைத்து கேஜிபிவிகளுக்கும் வழங்கப்படுகிறது. அவைகளாவன:

- அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் தெரிவு செய்தலுக்கான நடைமுறைகள்
- ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் நியமனம்
- குழந்தைகளின் சேர்க்கை மற்றும் தக்கவைத்தல்
- குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழல், பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரமான கழிப்பறை வசதிகள் வழங்குதல்
- ஆசிரியர்களின் கடமைகள்,
- கற்பித்தல் நடவடிக்கைகள் (கல்வி மற்றும் கல்வி சாரா)
- நூலக செயல்பாடுகள்
- கல்வி பொருட்கள் வழங்குதல்
- வினாடி வினா நிகழ்ச்சிகள் மற்றும் குழு செயல்பாடுகள், தினசரி செயல்பாடுகளுக்கான அட்டவணை
- ஆரம்ப சுகாதார நிலையத்துடன் ஒருங்கிணைந்து சுகாதார பரிசோதனைகளை நடத்துதல்
- பதிவேடுகளை பராமரித்தல்
- தேசிய வருவாய்வழி மற்றும் திறன் தேர்வுக்கான பயிற்சி

- VIIIம் வகுப்பு தேர்ச்சி பெற்ற குழந்தைகளை IXம் வகுப்பு சேர்த்தல்
- ஆவணப்படுத்தல், ஒன்றிய, மாவட்டம் மற்றும் மாநில அளவில் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்

மேற்கூறியவற்றைத் தவிர, உண்டு உறைவிடப்பள்ளிகள் விடுதிகளுக்கான/மத்திய திட்ட ஒப்புதல் குழுவின் நிதி ஒதுக்கீடு மற்றும் கீழ்காணும் செயல்பாடுகளுக்கு நிதியைப் பயன்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகிறது.

- குழந்தைகளுக்கு உணவு/தங்குமிடம் வழங்குதல்,
- குழந்தைகளுக்கு உதவித்தொகை
- ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கு ஊதியம்,

- கேஜிபிவி உண்டு உறைவிடப்பள்ளிகள்/விடுதிகளை பராமரித்தல்,
- குழந்தைகளுக்கு குறிப்பிட்ட திறன் பயிற்சி வழங்குதல்,
- VIII/ XII வகுப்பு தேர்ச்சி பெற்ற குழந்தைகளின் காரணமாக ஏற்படும் காலியிடங்களை நிரப்ப ஆயத்த முகாம்கள் நடத்துதல்
- கற்றல் கற்பித்தல் பொருட்கள் தயாரித்தல்
- குழந்தைகளுக்கு தற்காப்பு பயிற்சி வழங்குதல் மற்றும்
- பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடத்துதல்

அனைத்து கேஜிபிவி உண்டு உறைவிடப்பள்ளிகள்/விடுதிகளுக்கு நிதியானது தொடரும் மற்றும் தொடரா தலைப்புகளின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**:

- SC மற்றும் ST போன்ற பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கான கல்வியை அணுகுவதற்கான வசதிகள் வழங்கப்படும்.
- பெண் கல்வியில் அதிக பங்கேற்பு அடையப்படும்.
- கேஜிபிவிகளில் படிக்கும் அனைத்து பெண்களுக்கும் தரமான கல்வி உறுதி செய்யப்படும்.
- பெண் குழந்தைகள் இடைநிற்றலின்றி முழுவதுமாக தக்கவைக்கப்படும்.
- பெண் கல்வியின் தரம் அவர்களின் திறனை மேம்படுத்தி, போட்டி நிறைந்த சமுதாயத்தில் முன்னேற்றும்.
- கேஜிபிவிகளில் பாதுகாப்பான சூழல் உறுதி செய்யப்படும்.

**முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPIs):**

- கேஜிபிவிகளில் நிரப்பப்பட்ட மாணவிகள் விகிதம் அல்லது கேஜிபிவியில் உள்ள இடங்களின் எண்ணிக்கை மற்றும் சேர்க்கை விகிதம்.
- கேஜிபிவிக்களில் மாணவிகள் தேர்ச்சி பெற்று அடுத்த வகுப்புகளுக்கு இடைநிற்றலின்றி செல்லுதல் மற்றும் தக்கவைத்தல் விகிதம்.
- பெண்களின் கற்றல் விளைவுகளில் முன்னேற்றம்.
- எரியூட்டி வசதி (incinerators) கொண்ட கேஜிபிவிகளின் எண்ணிக்கை.
- சானிட்டரி பேட் விநியோக இயந்திரங்களைக் கொண்ட கேஜிபிவிகளின் எண்ணிக்கை.
- குழந்தை பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கேஜிபிவியின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தணிக்கையின் எண்ணிக்கை (ஒரு

முறை/இரண்டு முறை/மூன்று முறை/நான்கு முறை/ஆண்டுக்கு நான்கு முறைக்கு மேல்).

- கேஜிபிவியின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தணிக்கையில் மூத்த பெண் மாணவிகள் ஈடுபட்டுள்ளவர்கள் எண்ணிக்கை.
- சைபர் பாதுகாப்பு மற்றும் உளவியல்-சமூக அம்சங்கள் போன்றவற்றில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பெற்றுள்ள பயிற்சி.
- பெண்களின் சேர்க்கை மற்றும் வருகையை மேம்படுத்துதல்.

**நிதி ஒதுக்கீடு - 2021-22**

| வி.எண் | கேஜிபிவி வகைகள் | நிதி ஒதுக்கீடு (தொடரும்) (ரூ. இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (தொடரா) (ரூ. இலட்சத்தில்) | மொத்தம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | கேஜிபி-வகை- I (கடந்த ஆண்டு) வகுப்புகள்(VI -VIII) | 1898.2 | 1.00 | 1899.2 |
| 2 | கேஜிபி-வகை- II (கடந்த ஆண்டு) வகுப்புகள்(VI -X) | 243.33 | 100.91 | 344.24 |
| 3 | கேஜிபி-வகை- II (புதியது) (வகுப்புகள் VI -X) | 57.01 | 95.91 | 152.92 |
| 4 | கேஜிபி-வகை- III (கடந்த ஆண்டு) (வகுப்புகள் VI -XII) | 215.78 | 4.00 | 219.78 |
| 5 | கேஜிபி-வகை- III (புதியது) (வகுப்புகள் VI -X) | 227 | 384.64 | 611.64 |
| 6 | கேஜிபி-வகை- IV (கடந்த ஆண்டு) (வகுப்புகள் IX -XII) | 1172.2 | - | 1172.2 |
| | **மொத்தம்** | **3813.52** | **586.46** | **4399.98** |

**கேஜிபிவிகளின் வகைகள் மற்றும் பயனாளிகள் 2021-22**

| வகைகள் | வழங்கப்படும் வசதி | மொத்த கேஜிபிவி | பயனாளிகள் |
|---|---|---|---|
| I (வகுப்பு 6 - 8) | உண்டு உறைவிடப்பள்ளி | 47 | 3500 |
| II (வகுப்பு 6 - 10) | வகுப்பு 6-8 –உண்டு உறைவிடப் பள்ளி | 6 | 640 |
| | வகுப்பு 9-10-விடுதி வசதி மட்டும் | | |
| III (வகுப்பு 6 - 12) | வகுப்பு 6 - 8 உண்டு உறைவிடப் பள்ளி மற்றும் | 8 | 1020 |
| | வகுப்பு 9 - 12 விடுதி வசதி மட்டும் | | |
| IV (வகுப்பு 9 – 12) | வகுப்பு 9 - 12 விடுதி வசதி மட்டும் | 44 | 4400 |
| | **மொத்தம்** | **105** | **9560** |

<u>**புகைபடங்கள்**</u>




**கேஜிபிவி உண்டு உறைவிடப் பள்ளி –**




**கேஜிபிவி உண்டு உறைவிடப் பள்ளி – அரியலூர்**




கேஜிபிவி விடுதி – சிவகங்கை மாவட்டம்




கேஜிபிவி விடுதி – நாமக்கல் மாவட்டம்